**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 155** **நாள்: 16.09.2024**

**இன்று (16.09.2024) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சமூக நீதி நாள் உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்களும் ஏற்றுக் கொண்டனர்.**

செப்டம்பர் 17 ஆம் நாள் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு, இன்று (16.9.24) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் ரிப்பன் கட்டட அலுவலக வளாகத்தில், தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதனைத்தொடர்ந்து, அரசு உத்தரவின்படி, மாண்புமிகு மேயர் அவர்களின் தலைமையில், மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் சமூகநீதி நாள் உறுதிமொழியினை ஏற்றனர்.

இந்நிகழ்வில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு மு. மகேஷ் குமார் அவர்கள், ஆணையாளர் திரு ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந.இராமலிங்கம் அவர்கள், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**